

மத்திய சென்னை தி.மு.க. வேட்பாளர் தயாநிதி மாறன் சென்னை சூளை பகுதியில் உள்ள 77 வது வார்டு உட்பட்ட காஜா சாகிப் தெருவில் தேர்தல் பணிமனையை திறந்து வைத்தார். அருகில் அமைச்சர் பி.கே.சேகர் பாபு, மேயர் பிரியா உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை தெற்கு மாவட்டம் விருகம்பாக்கம் தொகுதி கலைஞர் நகர் வடக்கு பகுதி தேர்தல் பணிமனையினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க. தனசேகரன் பகுதி செயலாளர்கள் மு.ராசா, கே.கண்ணன், தொகுதி பொறுப்பாளர் கண்ணிகை ஸ்டாலின், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் உதுரைராஜ், எஸ்.டி. தங்கராஜ், பி.எஸ்மு.ருகேசன், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன் உள்ளிட்ட கழகத்தினர் தோழமை இயக்க நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய

# மகத்தான பொறுப்பை நமது முதல்வர் ஏற்றுள்ளார்!

### பவானிசாகர் செயல் வீரர்கள் கூட்டத்தில் ஆ.ராசா பேச்சு!

ஈரோடு, மார்ச் 31-

நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பவானிசாகர் சட்டமன்ற தொகுதியில் 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சத்தியமங்கலத்தில் நீலகிரி தொகுதி தி.மு.க. வேட்பாளர் ஆ.ராசா தலைமையில் நடைபெற்றது. ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் பங்கேற்ற 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் ஆ.ராசா பேசியதாவது:-

ஸ்பெக்ட்ரம் ஏலம் விடுவதாக சொன்னார்கள். அன்றைக்கு 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் என எல்லாரையும் நம்ப வைத்தார்கள். இன்றைக்கு என்ன தெரியுமா அதே ஸ்பெக்ட்ரத்தை ஏலமுறை இல்லாமல் தாரை வார்த்து கொடுத்துள்ளார்கள். அந்த கம்பெனிகள் எல்லாம் பா.ஜக்கு ரூ.400கோடி, ரூ.500 கோடி என நிதி கொடுத்திருக்கிறார்கள்.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இருக்கும் முதல்வர்களை மோடி அரசு மிரட்டுகிறது. மம்தா பானர்ஜி, பட்நாயக் எல்லாம் இருக்கிறார்கள். இதை தட்டி கேட்டால் உடனடியாக அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சிபிஐ வந்து விடும் என்ற அச்சம் உள்ளது. இதையெல்லாம் வீட்டுக்கு அனுப்புவோம் என்று சொல்லும் ஆற்றல் மற்றும் துணிச்சல் உள்ள ஒரே தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான்.

தமிழ்நாட்டை காக்கும் பொறுப்பு இந்தியாவை காப்பாற்ற வேண்டிய மகத்தான பொறுப்பினை நமது தலைவர் ஏற்றுள்ளார். எனவே, இந்த தொகுதியில் போட்டியிடும் எனக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆ.ராசா எம்.பி. பேசினார்.

இக்கூட்டத்தில், 'இந்தியா'கூட்டணி கட்சி நிர்வாகிகள், செயல்வீரர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களுக்கு

# கருநாடக மாநில தி.மு.க.வினர் ஆதரவு வழங்குவீர்!

### துணை முதல்வர் டி.கே. சிவகுமார் கடிதம்!

பொங்களூரு, மார்ச் 31-

கருநாடகா மாநிலத்தில் நடைபெறும் நாடாளு மன்றத் தேர்தலில் போட்டியிடும் 'இந்தியா' கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு கருநாடக மாநிலதி.மு.க. ஆதரவு வழங்கக் கோரி அக்கட்சியின் தலைவரும், துணை முதல்வருமான டி.கே. சிவகுமார் தி.மு.க. அமைப்பாளர் ந. இராமசாமிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதம் வருமாறு:-

பாரத நாட்டில் நடைபெறவிருக்கும் 18வது நாடாளுமன்ற தேர்தலில் 28 அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இந்திய பிளாக், (INDIAN NATIONAL DEVELOPMENT INCLUSIVE ALLIANCE) பெயரில் நம் நாட்டின் ஜனநாயகத்தை காப்பாற்ற ஒன்று பட்டு தேர்தலில் எதிர்ப்பது என்பது நமக்கெல்லாம் தெரிந்த செய்தியாகும்.

ஒன்றிய அரசின் சர்வாதிகாரம், மதவாதபோக்கை கண்டித்தும் மற்றும் அரசின் சாசன உரிமைகளை காப்பாற்ற எடுத்துவரும் நடவடிக்கைகள் மற்றும் அரசின் அமைப்பு சட்ட உரிமைகளை காப்பாற்ற ஒன்று பட்டு கட்சிகள் இந்த நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்கின்றன.

கருநாடகத்தில் மதவாத கட்சிகளை ஒதுக்கிதள்ளி எச்சரிக்கையுடன் வாக்காளர்களை ஒன்றுதிரட்டுவது நமது அதிமுக்கிய பணியாக இருக்கிறது.

இதன் காரணமாக 2024ல் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் கருநாடகத்தில் உள்ள 28 நாடாளுமன்ற தொகுதிகளில் பாரத தேசிய காங்கிரஸ் கட்சியின் வேட்பாளருக்கு தங்கள் கட்சி பெருவாரியான ஆதரவும் மற்றும் ஒத்துழைப்பும் அளித்திட கருநாடக மாநில பிரதேஷ் காங்கிரஸ் கட்சி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் கட்சி தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் செயல் வீரர்கள் தீவிரமாக தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி இந்திய பிளாக் கூட்டணி கொள்கைகளுக்கு ஆதரவாக காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள் வெற்றிக்கு ஒத்துழைக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயணம்!



**01.04.2024 ( திங்கட்கிழமை )**

### திருநெல்வேலி

| நேரம் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| மாலை 4.00 | இராதாபுரம் (திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்) | பெருந்தலைவர் காமராஜர் சிலை அருகில், வள்ளியூர் |

### கன்னியாகுமரி

| நேரம் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| மாலை 4.30 | கன்னியாகுமரி | குழித்துறை அண்ணா சிலை |
| மாலை 5.30 | | புதுக்கடை பேருந்து நிலையம் |
| மாலை 6.15 | | குளச்சல் பீச் முக்கு |
| மாலை 7.00 | | நாகர்கோவில் வடசேரி அண்ணா சிலை |
| மாலை 7.45 | | கொட்டாரம் ஜங்ஷன் |

## கழக வேட்பாளர் தயாநிதிமாறனை ஆதரித்து

# வில்லிவாக்கம் கிழக்கு - மேற்கில் பணிமனை திறப்பு - வாக்கு சேகரிப்பு!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 31-

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், இந்து அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் ஆகியோர் பங்கற்கும் தேர்தல் பணிமனை இன்று (31.3.2024-ஞாயிற்றுக்கிழமை) திறக்கப்படுகி றது.

காலை நிகழ்ச்சிகள் விவரம் வருமாறு:-

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

காலை 8.30 மணி - எண் 2/1, தந்தை பெரியார் நகர் முதல் தெரு, அயனாவரம், சென்னை - 23 (கோபிகிருஷ்ணா தியேட்டர் அருகில்)

காலை 8.45 மணி - 97வது வட்டம்-7, வெள்ளாள தெரு, அயனாவரம், சென்னை - 600 023.

காலை 9.00 மணி - 96வது வட்டம் - 593/228, 593/228, கே.எச்.ரோடு, (ரயில்வே குவார்டர்ஸ் எதிரில்) அயனாவரம், சென்னை - 600 023.

காலை 9.15 மணி - 98வது வட்டம் - 16, சோமசுந்தரம் 5வது தெரு, அயனாவரம், சென்னை - 600 023.

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

காலை 9.30 மணி இராஜ ராஜேஸ்வரி திருமண மண்டபம், முதல் பிரதான சாலை, சிட்கோ நகர், வில்லிவாக்கம்

காலை 9.45 மணி 94வது வார்டு - 6/92, 3வது பிரதான சாலை, சிட்கோ நகர், வில்லிவாக்கம்

காலை 10.00 மணி - 95வது வார்டு - 54, மேட்டு தெரு சந்து, வில்லிவாக்கம்

காலை 10.15 மணி - 104வது வார்டு - 35, நேரு நகர், 2வது அவென்யூ, திருமங்கலம், அண்ணாநகர் மேற்கு

இதில் பகுதி கழக செயலாளர்கள் வாசு, கு.பி. ஜெயின் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இன்று (31.3.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை எழும்பூர் வடக்கு பகுதியில் மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் அவர்களின் பரப்புரை விவரம் வருமாறு:-

31.3.2024 - ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு 78வது வார்டு தானா தெரு சர்ச்சில் துவங்கி முருகப்பா தெரு, மூக்காத்தால் தெரு, வடமலை தெரு வழியாக பெரம்பூர் பேரக்ஸ் சாலை, ராகவா தெரு, நம்மாழ்வார் தெரு, நரவிங்க பெருமாள் தெரு, ஏ.பி.ரோடு 1வது லேன் (சாய்பாபா கோயில் வழி), ஏ.பி. ரோடு 2வது லேன், கே.கே. லேன் (U Turn), சுப்பா தெரு, மார்க்கெட் வழியாக டி.கே. முதலி தெரு, ஆவடி சீனிவாகன் தெரு வழியாக ஆண்டியப்பன் தெரு, ஆலந்தூர் சுப்பிரமணி தெரு, ஆரிமுத்து மேஸ்திரி தெரு, சட்டணன் தெரு வழியாக சி.கே.பி. கோயில் தெரு, அங்காளம்மன் கோயில் தெரு (மன்றம்), வி.வி. கோயில் தெரு, காஞ்சிபுரம் முனுசாமி (அ) அஷ்டபுஜம் முதல் சந்து, அஷ்டபுஜம் ரோடு வழியாக முத்து தெரு வழி, அருணாசலம் தெரு, ஏற்றாண் தெரு, மூக்கு (செ) தெரு, ஐந்து விளக்கு வழியாக சர்ச் தொடர்ந்து சிதாணந்தம் தெரு, கந்தசாமி தெரு, வெங்கடேசன் தெரு வழியாக படவட்டம்மன் கோயில் தெரு, தானா தெரு இந்திரா காந்தி சிலை

99வது வார்டில் வெங்கடம்மாள் சமாதி தெரு வழியாக பொன்னன் தெரு, ரத்தின சபாபதி தெரு, கந்தப்பா0 தெரு, தாண்டவன் தெரு, வீராசாமி தெரு, சோலையம்மன் கோயில் தெரு, பெருமாள் தெரு, சுந்தரம் தெரு வழியாக சுந்தரம் லேன், பார்த்தசாரதி தெரு,

சண்முகராயன் தெரு வழியாக திடீர் நகர், சாலைமா நகர் வழி, சுந்தரம் லேன் வழி, மேனாட் தெரு, பொன்னப்பா தெரு, போலீஸ் குடியிருப்பு, கரும்பு தோட்டம், (Noble) நோபல் ஆஸ்பிட்டல் வழி, சரவண பெருமாள் தெரு, ராமசாமி தெரு, வெள்ளாளத் தெரு, லாட்டர்ஸ், பிளவர்ஸ் ரோடு வழி, நேரு பார்க், சாஸ்திரி நகர் நடைபயணம், புல்லாவரம், பூபதி நகர், ஓசான்குளம் நிறைவடைகிறது.

இந்நிகழ்வில் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணி நிர்வாகிகள், பாக முகவர்கள், BLC உறுப்பினர்கள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - மு.மகேஷ்குமார் - இரா.துரைராஜ் பங்கேற்பு

# 169 'அ' வட்டத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் வாக்குச் சேகரிப்பு!

### வட்டச் செயலாளர் சைதை மு.இராஜா வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 31 -

169 அ வட்டச் செயலாளர் சைதை மு.இராஜா விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சைதை கிழக்கு பகுதி 169 அ வட்டத்தில் இன்று (31.03.2024 ஞாயிறு) மாலை 4:00 மணிக்கு ஜோன்ஸ் சாலையில் தொடங்கி வட்டத்திற்குட்பட்ட பல பகுதிகளில் வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் வாக்கு சேகரிக்கின்றார். இது குறித்து வட்டச் செயலாளர் சைதை மு.இராஜா விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு: -

சைதை கிழக்கு பகுதி 169 அ வட்டத்தில் இந்தியா கூட்டணி தென் சென்னை நாடாளுமன்ற வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன், அமைச்சர் மா.சுப்பிரமணியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், பகுதிச் செயலாளர் இரா. துரைராஜ் ஆகியோர் முன்னிலையில் வாக்குச் சேகரிக்கிறார்.

இதில் மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன், தொகுதி பொறுப்பாளர் கோ. வி.லெனின், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத் சைதை மா. அன்பரசன், மின்னல் கந்தப்பன் பகுதி துணைச் செயலாளர் மு. பாக்கியலட்சுமி மாவட்ட பிரதிநிதிகள் என். நந்தகோபால், சைதை எஸ். ராதாகிருஷ்ணன், சைதை ஏ. மஜித், ஆகியோர் பங்கேற்கின்றனர்.

கிழக்கு ஜோன்ஸ் சாலையில் . தொடங்கி, மசூதி தோட்டம் வழியாக சூடியம்மன் பேட்டை, காவேரி நகர், ரயில்வே பார்டர் 2வது தெரு பாரதிதாசன் மெயின்ரோடு, சாஸ்திரி 3வது தெரு, சாஸ்திரி 2வது தெரு, சாஸ்திரி 1வது தெரு, 70 அடி சாலை அப்பாவு நகர் கோயில் ஆர்ச், இந்திரா காந்தி தெரு, காந்தி தெரு, ரயில்வே பார்டர் 1வது தெரு, ரயில்வே பார்டர் 2வது தெரு, கஸ்தூரிபாய் தெரு, பாரதி தெரு, ஆஸ்பத்திரி ரோடு, காந்திபுரம், மாத்தம்மா கோவில் வழியாக இடது புறம் திரும்பி 70 அடி சாலை வழியாக மேற்கு சி.ஐ. டி. நகர், நந்திலுப் மேற்கு சி.ஐ.டி.நகர் வழியாக எம். சி. ராஜா விடுதி அடைந்து,அண்ணா சாலை வழியாக ஸ்கூல் ரோடு மாடல் ஹட்மென்ட் ரோடு, ராஜபாளையம் வந்து புகாரி ஓட்டல் சிக்னலை கடந்து பேன் பேட்டை 1வது தெரு, அண்ணாசாலை வழியாக தாடண்டர் நகர், "A" பிளாக், "C" பிளாக், "B" பிளாக், அரசுப்பண்ணை, ஜோதி அம்மாள் நகருடன் முடிவடைகிறது. இந்நிகழ்வில் பகுதி கழக நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அளவிலான அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக தலைவர்கள், பாக களப்பணியாளர்கள், மற்றும் கழக உடன்பிறப்புகள் மற்றும் கூட்டணி கட்சி தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்ட செயலாளர் சைதை மு.இராஜா கேட்டுக்கொள்கிறார்.



வடசென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்,ஏ. இராயபுரம் தொகுதி தேர்தல் பணிக்குழு தலைவர், ஐட்ரீம் இரா. மூர்த்தி எம்.எல்,ஏ. ஆகியோரின் தலைமையில், மேற்கு பகுதி கழகச் செயலாளர் வ.பெ.சுரேஷ் ஆகியோரின் முன்னிலையில் 48, 48 அ 52 வட்டத்திற்கு உட்பட்ட சுப்புராயன் தெரு, சோலையப்பன் தெரு, தெலுங்கு செட்டி தெரு, நல்லப்ப வாத்தியார் தெரு, மேற்கு கல்லறை சாலை, டி.எச் ரோடு, சண்முகநாதன் தெரு, ராமானுஜ கூடம் தெரு, நமச்சிவாயம் தெரு எம்.எஸ் நாயுடு தெரு, ஆகிய இடங்களில் வடசென்னை தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமி உள்ளிட்ட அனைவரும் வீதி வீதியாக சென்று வாக்கு சேகரித்தனர். உடன் இராயபுரம் தொகுதி பொறுப்பாளர் .நவீன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இளைய அருணா, பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார், நாகம்மை கருப்பையா, இரா.வெற்றி வீரன், வட்டச் செயலாளர்கள் இரா.பாலன், எம்.ரவி, கொரியர் முருகன், பால லட்சுமணன், வடசென்னை மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் எம் எஸ் திரவியம், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் சி.சௌந்தர், மதிமுக மாவட்டச் செயலாளர் சு. ஜீவன் எம்.சி., இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாவட்டத் தலைவர் கமுதி சம்சுதீன், மனிதநேய மக்கள் கட்சியின் மாவட்டச் செயலாளர் ராயபுரம் அலி, மக்கள் நீதி மைய மாவட்டச் செயலாளர் மாறன், ஆம் ஆத்மி கட்சியின் முகமது பாரூக், சமத்துவ மக்கள் கழகத்தின் மாவட்டச் செயலாளர் ஆர்.பாஸ்கர், மற்றும் கழக உடன்பிறப்புகள் திரளாக பங்கேற்றனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம் அத்திமஞ்சேரிபேட்டை. சுரக்காய்பேட்டை. ஆகிய ஊராட்சியில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது ஒன்றிய செயலாளர் பிடி.சந்திரன் ஏற்பாட்டில் பொதுமக்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தார்கள். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், திருத்தணி தொகுதி பார்வையாளர் வட சென்னை நா. மனோகரன், திருத்தணி வினோத்குமார், சி.ஜே.சீனிவாசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.எம். சுகுமாரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முரளி சேனா, பொன் சு. பாரதி, ராமச்சந்திரன், பி.டி. குமரேசன், கோவர்தன், மோகன், சிவா, மணி, எத்திராஜ், சிவகுமார், சுப்பிரமணி, செல்வம், சுரேஷ், சரவணன், தேவராஜ் உள்பட பலர் உள்ளனர்.